






திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (15.11.2024) மாலை, பெரம்பலூரில் நடைபெற்ற 'அரியலூர் – பெரம்பலூர் மாவட்ட நிர்வாகிகளுடன் சந்திப்பு' நிகழ்ச்சியில் பங்கேற்று, 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.11.2024) அரியலூர் விருந்தினர் மாளிகையில், கழகத்தின் அரியலூர் மாவட்ட தெற்கு தகவல் தொழில்நுட்ப பிரிவு ஒருங்கிணைப்பாளர் திருமதி திவ்யா வீரமணி தம்பதியரின் ஆண் குழந்தைக்கு "திராவிடச் செல்வன்" என்று பெயர் சூட்டி, வாழ்த்தினார். அரியலூர் மாவட்ட கழகச் செயலாளரும், போக்குவரத்துத் துறை அமைச்சருமான எஸ்.எஸ். சிவசங்கர், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநிலச் செயலாளரும், தொழில் துறை அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.11.2024) அரியலூர் விருந்தினர் மாளிகையில், அரியலூர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவின் குலோத்துங்கன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளரும், போக்குவரத்துத் துறை அமைச்சருமான எஸ்.எஸ்.சிவசங்கர், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநிலச் செயலாளரும், தொழில் துறை அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.

# சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!



சேலம், நவ. 17-

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையிலும், தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் 081 கெங்கவல்லி க.ஆனந்த், விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 082 ஆத்தூர் எம்.எஸ்.கணேஷ்குமார், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 083 ஏற்காடு சி.ஆனந்தகுமார், மாநில இளைஞர் அணி துணை செயலாளர், 091 வீரபாண்டி டி.கே.கிருபாகரன், ஈரோடு வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆகியோரது முன்னிலையிலும் நடைபெறும். இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் அமைப்பாளர்கள், வாக்குசாவடி முகவர்கள் BLA2 மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

வருகின்ற நவம்பர் 27ம் தேதி கழக இளைஞரணி செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா,

வாக்குச்சாவடி கமிட்டி (BLC) அமைப்பது.

வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் சிறப்பு முகாம் நவம்பர் 23, 24 தேதியில் நடைபெறுவது தொடர்பாக

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில்

# விழுப்புரம் தெற்கு மாவட்ட, ஒன்றிய , நகர, பேரூர் இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் அறிவிப்பு!

விழுப்புரம், நவ. 17-

விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞரணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (17.11.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில் கழக துணைப் பொதுச் செயலாளர், வனத் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆலோசனைக் கிணங்க, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி தலைமையில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் நடைபெறுகிறது.

மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாநில விவசாயத் தொழிலாளி தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் அ.சிவா எம்.எல்.ஏ., மாநில மருத்துவ அணி இணை செயலாளர் டாக்டர் இரா இலட்சுமணன் எம்.எல்.ஏ., மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், தலைமை கழக வழக்கறிஞர் சுவை. சுரேஷ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், ஆர். கற்பகம் மாநில மகளிர் பிரச்சாரக் குழு செயலாளர் தேன்மொழி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ். அன்பு, TDJ ராஜவேல் , எஸ். பாலாஜி , பா.கலைவாணன், ஏ.சி.கே.பிரேம், ஏ. கே தேவேந்திரன், இவர்களின் முன்னிலையில் நடைபெறுகிறது. கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

நவம்பர் 27 கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழாவை இளைஞர் எழுச்சி நாளாக கொண்டாடுவது.

இளைஞர் அணி ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.11.2024) ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம், இளைஞர் விவகாரம் & விளையாட்டு அமைச்சகம், தமிழ்நாடு மை பாரத் நேரு யுவகேந்திரா மற்றும் தனியார் கல்லூரி இணைந்து நடத்திய காஷ்மீர் இளைஞர் கலை, பண்பாடு, சுலாச்சார பரிமாற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற காஷ்மீர் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் சந்தித்து அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மை பாரத் நேரு யுவகேந்திரா மாநில இயக்குநர் செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### 'வேர்களைத் தேடி' - பண்பாட்டு சுற்றுலாத் திட்டத்தில் பங்கேற்றிட

# அயலகத் தமிழ் இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம்!

## தமிழக அரசு அறிவிப்பு!

சென்னை, நவ.17-

அயலகத் தமிழர் நலத்துறையினரால் நடத்தப்படும் பண்பாட்டுச் சுற்றுலாத் திட்டமான 'வேர்களைத் தேடி' திட்டத்தில் பங்கேற்றிட அயலக தமிழ் இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

12.01.2024 அன்றைய செய்தி வெளியீட்டில் முதலமைச்சர் அவர்கள் "புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள், இளம் மாணவர்கள், தாய்த் தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணம், ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்யப்படும்" என அறிவித்தார்.

அதன் அடிப்படையில், இந்த பண்பாட்டு சுற்றுலா திட்டம் "வேர்களைத் தேடி" என்ற பெயரில் அயலகத் தமிழர் நலத்துறையினால் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை இரண்டு கட்ட பயணங்களில் 157 அயலகத் தமிழ் இளைஞர்கள் இப்பயணத்தில் பங்கேற்றுள்ளனர். முதற்கட்ட பயணத்தில் (27.12.2023 - 12.01.2024) ஆஸ்திரேலியா, பிஜி, இலங்கை மற்றும் கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 57 மாணவர்கள் மற்றும் இரண்டாம் கட்ட பயணத்தில் (01.08.2024 - 15.08.2024) தென் ஆப்ரிக்கா, உகாண்டா, குவாடலூப், மார்டினிக், பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை, பிரான்சு மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் தமிழகத்தின் முக்கிய வரலாற்று மற்றும் பண்பாட்டு சிறப்புமிக்க இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, தமிழர் வாழ்வியல் மற்றும் கட்டிடக்கலை குறித்து விளக்கப்பட்டது.

தொடர் நிகழ்வாக, மூன்றாம் கட்ட பயணம் 29.12.2024 முதல் 12.01.2025 வரை பதினைந்து நாட்களுக்கு செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த கலாச்சார சுற்றுலா நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, வரலாற்று மற்றும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த கல்லணை அணை, திருவள்ளுவர் சிலை, வ.உ.சி நினைவிடம், கீழடி, பாம்பன் பாலம், சித்தன்ன வாசல், கானாடு காத்தான் அரண்மனை, சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில் தாராசுரம் கோவில், மற்றும் மாமல்லபுரம் கோவில் போன்ற இடங்களுக்கு பங்கேற்பாளர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

கலாச்சார சுற்றுப்பயணத் திட்டத்தில் பங்கேற்பாளர்களுக்கான பயிற்சி பட்டறைகள், தகவல் அமர்வுகள் மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் ஆகியவை அடங்கும். சென்னையில் தொடங்கும் இந்த பயணம் திருச்சிராப்பள்ளி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, காரைக்குடி, தஞ்சாவூர் உள்ளிட்ட 15 மாவட்டங்களை உள்ளடக்கியதாக அமையும்.

இந்த பயணத்தின் இடையே 01.01.2025 அன்று நடைபெறும் அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பின் வெள்ளி விழா நிகழ்விலும் மற்றும் இந்த பயணத்தின் முடிவில் ஜனவரி 11 மற்றும் 12, 2025 ல் நடைபெறும் மாபெரும் கொண்டாட்டமான அயலகத் தமிழர் தின விழாவில் மாணவ, மாணவியர்கள் பங்கேற்பார்கள்.

இப்பயணத்தின் நிறைவினைத் தொடர்ந்து, அவர்கள் வாழும் நாடுகளுக்கும் மற்றும் தமிழ்நாட்டிற்கும் இடையே பண்பாட்டு தூதுவர்களாக செயல்பட்டு, தமிழ் மொழி, தமிழர் பண்பாடு மற்றும் தமிழர் வாழ்வியல் குறித்த விடயங்களை அவர்தம் நாடுகளில் பரப்பிடவும், தொழிற்சார்ந்த மற்றும் கல்விசார்ந்த தளங்களில் இணைந்து செயல்பட தங்களால் இயன்ற பணிகளை மேற்கொள்வர்.

இப்பயணத்தில் கலந்து கொள்ள விரும்பும் அயலகத் தமிழ் இளைஞர்கள் இத்துறையின் கீழ்க்கண்ட வலைதள பக்கத்தில் பதிவு செய்ய தமிழ் நாடு அரசின் சார்பில் அழைப்பு விடுக்கப்படுகிறது.

வலைதளம்: https://nrtamils.tn.gov.in/portal/ryr.

இவ்வாறு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் திருச்சி கிழக்கு மாநகர தி.மு.க.வின் சார்பில் பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம் . கிழக்கு மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் முன்னிலையில் நடைபெற்றது கூட்டத்தில் திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மணிராஜ் கலந்து கொண்டார். கூட்டத்தில் பகுதிக் கழகச் தர்மராஜ். மாநகர துணைச் செயலாளர் சரோஜினி மற்றும் பாகம் முகவர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் இறந்த வாக்காளர்கள் பட்டியலில் இடம்பெற்றிருந்தால் அதனை கண்டறிந்து நீக்கம் செய்வது. 18 வயது பூர்த்தியடைந்த புதிய வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்தல் பணியையும் சிறப்பாக மேற்கொள்வது. 2026 சட்டமன்ற தேர்தலில் 200 என்ற இலக்கை அடைவதை குறிக்கோளாகக்கொண்டு பணியாற்ற வேண்டும் தமிழக அரசு கொண்டுவந்துள்ள மகளிர் உரிமைத் தொகை, இலவச பேருந்து பயணம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களையும் மக்களிடம் எடுத்துக்கூறி ஆதரவு திரட்டவேண்டும். மக்களை அடிக்கடி சந்தித்து அரசின் திட்டங்கள் குறித்து பேசவேண்டும். எனவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இதில் கிழக்கு மாநகரத்திற்குட்பட்ட பொன்மலை பகுதி பாகமுகவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.